**முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 20.11.2024**

**O.S. 172/2021**

**வா.சா. அருண்குமார்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

என்ன பரிகாரங்கள் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தற்காலிக இடைநீக்கத்தை ரத்து செய்ய கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 6 ஆண்டுகளாக 1ம் பிரதிவாதி சங்கத்தின் செயலாளராக இருந்ததால் யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்று தெரியும் என்றால் ஆம். நான் விவேகானந்த எஜிகேசனல் சொசைட்டிக்கு எதிராக பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். நான் அந்த சங்கத்திற்கு எதிராக மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் சங்கத்தின் செயலாளர் மற்றும் திரு.சி ராஜன் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.சங்கத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் அதன் தலைவரை சங்கத்தை பிரதிநித்துவ படுத்துவதாக வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரிதான்,

சங்க விதிகளில் சங்கத்தின் செயலாளரை சங்கத்தை பிரதிநித்துவ படுத்தி வழக்கு தாக்கல் செய்ய விதி இல்லை என்றால் சரிதான். நான் செயலாளரை 3 ம் பிரதிவாதியாகவும் 4 ம் பிரதிவாதி ராஜனை தனிப்பட்ட முறையில் கட்சி சேர்த்துள்ளேன் என்றால் ஆம். நான் இந்த வழக்கை 23.7.2021 அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் ஆம். நான் வழக்கு பரிகாரங்கள் கேட்டு மதராஸ் உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் நீதிபேராணை மனு எண்.12380/2021 தாக்கல் செய்தேன் என்றால் கல்லூரியில் தேர்தல் ஆகஸ்ட் 2021 ல் இருந்தது என்னுடன் சேர்ந்து என் சகோதரர்கள் இருவரையும் தற்காலிகமாக நீக்கினார்கள் அதனால் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தேன். அந்த நீதிபேராணை மனுவில் இடைக்கால நிவாரணமாக என்னை வாக்களிக்க அனுமதிக்க வேண்டும் என கேட்டேன் என்றால் சரிதான்.

அந்த நீதிபேராணை மனுவில் எதிர்மனுதாரர் பதில் தாக்கல் செய்ததில் நான் இந்த வழக்கை மறைத்து நீதிபேராணை தாக்கல் செய்ததாக தெரிவித்திருந்தார் என்றால் நியாபகமில்லை. அந்த நீதிபேராணை மனுவில் இறுதி உத்தரவு என்ன பிறப்பிக்கப்பட்டது என்றால் மாவட்ட பதிவாளரை அணுக கோரி முடிக்கப்பட்டது. அந்த நீதிபேராணை மனுக்கு பின் நான் வேறு நீதிபேராணை மனு தாக்கல் செய்தேனா என்றால் 2024 ம் ஆண்டு தேர்தலில் ஓட்டு போட அனுமதி அளிக்க வேண்டி நீதிபேராணை மனு தாக்கல் செய்தேன் அந்த வழக்கு எண் நியாபகமில்லை. அந்த நீதிபேராணை மனு எண்.18838/2024 என்றால்

சரிதான். நீதிபேராணை மனு எண்.18838/2024 நிலுவையில் உள்ளதா என்றால் முடிந்து விட்டது. அந்த வழக்கில் இந்நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு இருப்பதால் இந்நீதிமன்றத்திலேயே பரிகாரம் தேடி கொள்ள உத்தரவு ஆனது அந்த உத்தரவு நகல் கிடைக்கபெறவில்லை. அந்த நீதி பேராண்மை மனுக்களில் எனக்கு தேர்தலில் வாக்களிக்க இடைக்கால உத்தரவு கிடைக்கவில்லை என்றால் சரிதான்.

என்னை உறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்கியதற்கு காரணம் சொல்ல முடியுமா என்றால் இதுநாள் வரை அவர்கள் எனக்கு காரணம் சொல்லவில்லை. 24.8.2009 அன்று நான் பொதுக்குழுவில் 1ம் பிரதிவாதி சங்கத்தின் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்றால் சரிதான். அந்த சமயம் 1ம் பிரதிவாதி நிர்வாக குழு உறுப்பினர் என்றால் சரியல்ல உறுப்பினர் ஆவார். 23.8.2012 தேர்தலிலும் நான் மீண்டும் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் கல்லூரியில் நீச்சல்குளம் கல்லூரியில் அமைக்க பல்கலைகழக மானியகுழு நிதி ரூ.1 கோடி நிதிஒதுக்கீடு செய்தது என்றால் சரிதான். 9.5.2012 அன்று நீச்சல்குளம் அமைக்க கல்லூரியில் கால்கோல் விழா நடைபெற்றது என்றால் தேதி நியாபகமில்லை விழா நடைபெற்றது.

அந்த நீச்சல்குளம் கட்டும் வேலைக்கு ஒப்பந்ததாரரை ஏற்பாடு செய்தேனா என்றால் இல்லை. அந்த நீச்சல்குளம் கட்டும் பணிக்கு காலேஜ் முதல்வர் செய்திதாளில் விளம்பரம் கொடுத்து ஒப்பந்தபுள்ளி கோரி இருந்தார். அந்த சமயம் கல்லூரி முதல்வராக யார்இருந்தார் என்றால் சரியாக நியாபகமில்லை. ஒப்பந்ததாரர் பெயர் பூபதி. அந்த நீச்சல்குளம் அமைக்க ஒப்பந்த காலம் 6 மாதம் என்றால் எனக்கு தெரியாது.நீச்சல்குளம் கட்ட ஒப்பந்ததாரருக்கு பணி ஒதுக்கீடு செய்தது முதல் மேற்பார்வை செய்தது ஒப்பந்ததாரருக்கு பணம் பட்டுவாடா செய்தது அந்த கட்டுமானம் முடியும் வரையான பொறுப்பு கல்லூரி முதல்வரையே சார்ந்தது கல்லூரி கமிட்டிக்கு தான் நிதி வரும். கல்லூரி கமிட்டியில் சங்க உறுப்பினர்கள் 14 பேர் என்றால் சரிதான்.அது 9 பேர் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக குழு உறுப்பினர் என்றால் சரிதான். பாக்கி 5 பேரில் 1. முதல்வர் 2. பல்கலைகழக பிரதிநிதி மற்றமூவர் கல்லூரியில் பணி செய்பவர்கள்.

அந்த கல்லூரி கமிட்டியில் சங்கத்தின் செயலாளர் அவசிய உறுப்பினர் என்றால் ஆம். அந்த சமயம் பொதுக்குழு உறுப்பினர் கணேசனை எனக்கு தெரியும் அவர் நிர்வாக குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார் என்றால் சரிதான். மேற்சொன்ன கணேசன் 27.7.2012 அன்று என் மீது. 76,19,146 ரூபாய்க்கு பொய்கணக்கு காட்டியதாக நாகர்கோவில் மாவட்ட குற்றபிரிவு காவல் ஆய்வாளரிடம் ஒரு புகார் கொடுத்தார் என்றால் எனக்கு புகார் நகல் தரவில்லை. போலீசார் எங்கள் தணிக்கை அறிக்கையை பார்த்து விட்டு எந்த தவறும் நடைபெறவில்லை என கூறி வழக்கு எதுவும் பதியவில்லை. போலீசார் எந்த

காலத்திற்கான தணிக்கை அறிக்கையை பார்வையிட்டார்கள் என்றால் நினைவில்லை கணேசன் எந்த காலகட்டத்தில் பொய்கணக்கு எழுதப்பட்டதாக புகார் கொடுத்தார் என்றால் நினைவில்லை. 22.3.2014 அன்று நிர்வாக குழுவில் எனக்கு எதிராக நான் ஒப்பந்ததாரர் பூபதி கணக்கில் இருந்து ரூ.20 லட்சம் என் கணக்கிற்கு வந்ததை நான் சங்கத்திற்கு திரும்ப செலுத்த வேண்டும் என்று தீர்மானம் இயற்றப்பட்டது என்றால் என் பெயருக்கு அவ்வாறு தொகை வரவில்லை சொல்வது போல் தீர்மானமும் இயற்றப்படவில்லை.

29.3.2016 ல் நிர்வாக குழு உறுப்பினர்கள் மதுசூதனர் முத்தையா விஜயராகவன் ஆகியோர் எனக்கு எதிராக புகார் கொடுத்தார்களா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அன்றைய தினம் ஒரு தீர்மானம் இயற்றப்பட்டது என்றாலும் விசாரணை குழு அமைக்கப்பட்டது என்றாலும் அது 2ம் பிரதிவாதி தலைமையில் அமைக்கப்பட்டது என்றாலும் எனக்கு தெரியாது. 17.6.2017 அன்று கூடிய நிர்வாக குழுவில் பல்கலைகழக மானிய குழுவால் வழங்கப்பட்ட வரவு செலவு குறித்து விசாரணை செய்ய செயலாளருக்கு அனுமதி வழங்கப்பட்டதென்றால் எனக்கு தெரியாது. எனக்கு 17.6.2017 தீர்மானத்தின்படி செயலாளர் 3.4.2018 அன்று ஒரு விளக்கம் கேட்டு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பு உடன் ஒரு இணைப்பு கடிதமாக என்னை 11.4.2018 அன்று விசாரணைக்கு ஆஜராக சொல்லி இருந்தார் என்றால் அவ்வாறு இணைப்பு கடிதம் எதுவும் எனக்கு வழங்கப்படவில்லை.

நான் 11.4.2018 விசாரணையில் கலந்து கொள்ளவில்லை என கூறி 11.4.2018 அன்று செயலாளர் விசாரணை குழு கண்டறிந்த விவரங்களை செயற்குழு ஒப்புதலுக்கு விடப்பட்டு அதன் பின் பொதுகுழு உறுப்பினர்கள் பார்வைக்கு வைக்கப்படும் என கூறி ஒரு அறிவிப்பு கொடுத்தார் என்றால் கடிதம் வந்திருக்கலாம். நான் 11.4.2018 கடிதத்திற்கு பதில் அனுப்பவில்லை என்பதால் 18.4.2018 அன்று செயலாளர் எனக்கு மற்றொரு கடிதம் அனுப்பினார் என்றால் கடிதம் வந்திருக்கலாம். அந்த கடிதத்தில் 18.4.2018 செயற்குழு கூட்டத்தில் எனக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டதால் எனக்கு வாய்ப்பு அளிக்கும் விதமாக 25.4.2018 விசாரணைக்கு ஆஜராக தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் 25.4.2018 சென்றிருந்தேன் அங்கு அலுவலகத்தில் இருந்தவர்கள் விசாரணை குழு நபர்கள் இல்லை என தெரிவித்து நான் காத்திருந்து விட்டு திரும்பினேன்.

நான் சொல்வது போல் விவரங்கள் கூறி கடிதம்எதுவும்எழுதினேனா என்றால் அன்றே கடிதம் எழுதிகொடுத்து விட்டு வந்தேன். அந்த கடிதத்தை செயலாளர் அலுவலகத்தில் கொடுத்திருந்தேன் செயலாளர் அந்த அலுவலகத்தில் இல்லை. நான் தற்போது சொல்லிய விவரங்களை செயற்குழுவிற்கு தெரிவித்தேனா என்றால் ஆம் பதிவு

தபால் அனுப்பினேன். தேதி நினைவில்லை. அந்த கடிதத்தின் நகல் மற்றும்அஞ்சல் ஒப்புகை அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். பொதுகுழுவில் என்மீது குற்றசாட்டு சொல்லப்பட்டதை குறித்து என்றாவது ஏதாவது மனு கொடுத்தேனா என்றால் பொதுகுழுவில் தீர்மான புத்தகத்தில் பதிவு செய்துள்ளேன். பொதுகுழு உறுப்பினர்களிடம் கோரிக்கை மனு கொடுத்தேன்.அந்த தேதி நினைவில்லை ஆண்டும் நினைவில்லை. 90 பொதுக்குழு உறுப்பினர்களுக்கு மனு கொடுத்தேன். செயற்குழுவில் இயற்றப்படும் தீர்மானங்களை ரத்து செய்யவும் அதிகாரம் பொதுக்குழுவிற்கு உண்டு என்றால் தெரியாது.

நான் தெரிந்தோ தெரியாமலோ செய்த சில தவறுகளை மறைப்பதற்காகவும் அதில் இருந்து தப்பிப்பதற்காகவும் முறையான பதில் அனுப்பவில்லை என்றாலும் விசாரணைக்கு ஆஜராகவில்லை என்றாலும் செயற்குழு தீர்மானம் குறித்து பொதுகுழுவில் எந்த முறையீடும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காகவும் சாட்சி ஆஜர் செய்யலாம் என சொன்ன ஆவணங்களை ஆஜர் செய்ய குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)